நாள்.19.08.2025

**அசல் வழக்கு எண்.24/2014**

**பெயர்.ராசாத்தி**

**க.பெ.பச்சமுத்து (லேட்)**

**வா.சா.1– 7 மற்றும் 11 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா அ பட்டி சொத்தின் 2வது அயிட்ட சொத்தின் விஸ்திரணம் 12 செண்டு என்றால் சரிதான். அது ஆரம்பத்தில் யாருக்கு சொந்தம் என்றால் எனது தாத்தா பொட்டு கோனாருக்கு சொந்தம். அந்த சொத்து கருப்ப கோனாரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. பெரியான் கோனார் (எ) பெரியதம்பி என்பவர்தான் கிரையம் வாங்கினார். மீனி.க.பெரியதம்பி கோனார் யார் என்றால் தெரியாது. அவரது மனைவி பெயர் சின்னம்மாள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா ஆ பட்டி சொத்து மீனி.க.பெரியதம்பி கோனாருக்கு சொந்தமானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோதையன் யார் என்றால் என் அத்தை பெரியநாயகி மகன். அவருடைய அப்பா பெயர் கருப்ப கோனார். கோதையன் மற்றும் சிதம்பரம் தாவா ஆ பட்டி சொத்தில் பாதைக்காக 1 1/2 செண்டு கிரையம் வாங்கி அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது. தாவா ஆ பட்டி சொத்தில் மேற்படி பாதைக்காக கிரையம் வாங்கிய தேதியிலேயே கோதையன் என்பவர் 6 1/2 செண்டு நிலத்தை மீனி.க.பெரியதம்பி கோனார் என்பவரிடம் கிரையம் வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை.

தாவா அ பட்டி சொத்தில் 1 வது அயிட்டம் மட்டும்தான் பொட்டுகோனார் மற்றும் ரங்ககோனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். தாவா அ பட்டியில் 2வது அயிட்டம் மற்றும் ஆ பட்டி அயிட்டம் பொட்டுகோனார் மற்றும் ரங்ககோனாருக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. எனது சகோதரருக்கு ஆதரவாக வழக்கின் தோதிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.